செய்தி வெளியீடு எண்:551 நாள்:02.08.2021

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார்கள்.**

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் இன்று (2.8.2021) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள் திருவுருவப் படத் திறப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொள்ள வருகை தந்த போது, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆகியோர் வரவேற்றார்கள்.

இவ்விழாவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.மு.அப்பாவு அவர்கள் வரவேற்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமையுரையாற்றினார்.

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்ட மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். இறுதியாக மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் திரு.கு.பிச்சாண்டி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இச்சிறப்புமிக்க விழாவில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சிப் பானர்ஜி, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், புதுடில்லிக்கான தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி, முன்னாள் பேரவைத் தலைவர்கள், கட்சித் தலைவர்கள், வாரியத்

தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு இந்தியக் குடியரசுத்தலைவர் திரு.ராம்நாத் கோவிந்த் அவர்களைச் சென்னை விமான நிலையத்தில் வரவேற்று, தமிழ்நாடு பாடநூல் கழகம் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், பிரபல ஆங்கிலப் பதிப்பகங்களோடு கூட்டாக சேர்ந்து வெளியீட்டுள்ள நூல்களான (1) திருக்குறள் (Kural) - பேராசிரியர். பி.எஸ்.சுந்தரம் அவர்களின் ஆங்கில மொழிபெயர்ப்பான உலகப் பொதுமுறை எனப் போற்றப்படும் திருக்குறள், (2) கரிசல் கதைகள் (Along With the Sun) - கரிசல் இலக்கியத்தின் பிதாமகர் திரு. கி.ராஜநாராயணன் அவர்கள் தொகுத்தக் கரிசல் நில மக்களின் (கோவில்பட்டி, விருதுநகர் மாவட்டங்கள்) வாழ்வியலை நுணுக்கமாகச் சித்தரிக்கும் கதைகள், (3) வாடிவாசல் (Arena) - தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிகட்டின் சிறப்பைச் சித்தரித்து சாகித்ய அகாடமி விருதுபெற்ற திரு. சி.சு.செல்லப்பா அவர்கள் எழுதிய படைப்பு, (4) செம்பருத்தி (The Crimson Hibiscus)- நூற்றாண்டு காணும் தமிழ் எழுத்தாளர் திரு.கி.ஜானகிராமனின் அவர்களின் சிறந்த படைப்புகளில் ஒன்றான குடும்ப உறவு சிக்கல்களைச் சித்தரிக்கும் நாவல், (5) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் அனைத்துப் படைப்புகளும் நாட்டுடமையாக்கப்பட்ட, சாகித்ய அகாடமி விருதுபெற்ற முதல் பெண் நாவலாசிரியர் திருமதி இராஜம் கிருஷ்ணனின் அவர்கள் எழுதிய தமிழில் முதல் பெண்ணியல் நாவல் எனப் போற்றப்படும் “சுழலில் மிதக்கும் தீபங்கள்” (Lamp in the Whirlpool) (6) நாகர்கோவில் வட்டார வழக்கும், கைம்பெண் மறுமணத்தையும் முக்கிய அம்சங்களாகக் கொண்ட சாகித்ய அகாதமி விருதுபெற்ற திரு.நீல.பத்நாபனின் அவர்களின் “தலைமுறைகள்” (Generations) ஆகிய நூல்களை வழங்கினார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

•••••••••